பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 31 திங்கட்கிழமை 14.06.2021 கதிர் 87

## பருத்தித்துறை பொலிஸார் நால்வருக்குக் கொரோனா

(இ.கலையமுதன்)

யாழ். பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும், அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் 2

7 கோடி 10 இலட்சம் ரூபா பெறுமதியான

## 237 கிலோ கேரள கஞ்சாவுடன் பருத்தித்துறையில் மூவர் கைது



(இ.கலையமுதன்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் நடத்திய விசேட நடவடிக்கையில் 237 கிலோ 500 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அதனைப் படகில் கடத்திய மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 2

## திருமண நிகழ்வில் பங்கேற்ற 16 பேர் தனிமைப்படுத்தலில்!



(இ.கலையமுதன்)

அனுமதிக்கு மேலதிகமாக பலரும் திருமண நிகழ்வில் கூடியதால் குருநகர் பகுதியில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்ற 16 பேர் நேற்று தனிமைப்படுத்தப்பட்டனர்.

குருநகர் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட 2

# பஸ் 'பொடி'களை கடலில் இறக்குவதா? தமிழக மீனவர்கள் கடுஞ்சீற்றம்; எதிர்ப்பு!

## இராமேஸ்வரத்தில் புதனன்று ஆர்ப்பாட்டத்துக்கும் ஏற்பாடு



ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், யூன்.14

இலங்கையில் நீரியல் வளத் திணைக்களத்தினால் கடற் பரப்பில் பழைய பஸ் 'பொடி'களை இறக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தக்கோரி இராமேஸ்வரத்தில் நாளை மறுதினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இலங்கைக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களமும் கடற்றொழில் கூட்டுத்தாபனமும் இணைந்து யாழ்ப்பாணம் மாவட்ட கடல் எல்லைக்குள் இ.போ.சபையினால் கைவிடப்பட்ட 40 பஸ்' பொடி'களைக் கடலில் இறக்கும் பணி கடந்த 11 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படுகின்றது. 2

## கொரோனா சட்டத்தை மீறிய மேலும் 1,198 பேர் மாட்டினர்!



நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 1,198 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் 2

## பொலிஸ் உத்தியோகத்தராக நடித்தவர் வசமாக சிக்கினார்

தன்னைப் பொலிஸ் உத்தியோகத்தராகக் காண்பித்து நடமாடிய ஒருவரைக் கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸார் இன்று கைதுசெய்தனர்.

அச்செழு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது மோட்டார் சைக்கிளில் பொலிஸாரின் சின்னம் ஒட்டியிருந்ததுடன் தனது தொலைபேசியில் பொலிஸார் அணியும் ரீசேட் அணிந்து எடுத்த போட்டோவையும் வைத்திருந்தார் என்று 2

## 2 இளைஞர்கள் நீரில் மூழ்கி பலி

ஏறாவூரில் சோகம்

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் நீரில் மூழ்கி இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

8 இளைஞர்கள் நீராடுவதற்குச் சென்றுள்ளனர். இதில் 15 மற்றும் 17 வயதுகளுடைய இரு இளைஞர்களே நீரில் மூழ்கி மரண 2



## 238 கிலோ கேரள ......................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் இன்று அதிகாலை வடக்கு கடற்படை கட்டளைத் தலைமையகம் நடத்திய விசேட நடவடிக்கையின்போது, கரையை நோக்கி சந்தேகத்துக்கிடமான டிங்கி படகு ஒன்று பயணிப்பது கண்டறியப்பட்டது.

அதையடுத்து குறித்த படகை வழிமறித்து கடற்படையினர் மேற்கொண்ட சோதனையின்போது, கேரள கஞ்சா கொண்ட இரண்டு சாக்குகள் படகில் காணப்பட்டன. அதனால் படகில் பயணித்த மூவரையும் கடற்படையினர் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், சந்தேகநபர்களால் கடலில் வீசப்பட்ட கேரள கஞ்சாவின் மேலும் 6 சாக்குகள் இருப்பது தெரியவந்தது. அவற்றையும் கடற்படையினர் கடலில் தேடுதல் நடத்தி மீட்டனர்.

அதன் மூலம் 8 சாக்குகளில் அடைக்கப்பட்டுள்ள 237 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவைக் கடற்படையினர் கைப்பற்றினர்.

சர்வதேச கடல் எல்லையில் இருந்து குறித்த கேரள கஞ்சாவை டிங்கி படகு மூலம் கொண்டுவர கடத்தல்காரர்கள் முயன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி 71 மில்லியன் (7 கோடி 10 லட்சம்) ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் இருவர் 27 வயதுடையவர்கள் எனவும், இருவரும் பருத்தித்துறை - கொட்டடியைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்றையவர் அச்சுவேலி - வளலாய் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## பருத்தித்துறை......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இருவருக்கு காய்ச்சல் உள்ளிட்ட கொரோனா அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் அவர்கள் இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்களுக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது.

அதையடுத்து இன்று பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மற்றும் அருகில் வர்த்தக நிலையம் நடத்துபவர்கள் உள்ளிட்டவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும், பொலிஸ் நிலையத்துக்கு அருகில் தேநீர் சாலை ஒன்றை நடத்தி வருபவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து பி.சி.ஆர். பரிசோதனைக்காக அவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

## 2 இளைஞர்கள்........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மடைந்துள்ளனர்.

சடலங்கள் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக பொலிஸ் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## கொரோனா..........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

சட்டம் நடைமுறைக்கு வந்த கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 32 ஆயிரத்து 593 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீறி செயற்பட்ட 160 பேர் நேற்றுமுன்தினம் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## திருமண நிகழ்வில்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது அதிகளவானவர்கள் திருமண நிகழ்வில் பங்குபற்றியதை அவதானித்து யாழ்ப்பாண மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்தனர்.

இதையடுத்து அங்கு வந்த யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் 15 பேருக்கும் அதிகளவானவர்கள் திருமண நிகழ்வில் பங்குபற்றியதை உறுதிப்படுத்தி அவர்களைத் தனிமைப்படுத்தினர்.

நாடு முழுவதும் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் 15 பேருக்கு உட்பட்டு திருமணப் பதிவை மேற்கொள்ள முடியும் என அரசு அறிவித்திருந்த நிலையில் அதற்கு மேலதிகமாக அங்கு பலரும் ஒன்றுகூடியதால் தனிமைப்படுத்தியதாக யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர்

## பொலிஸ் உத்தி.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கோப்பாய் பகுதியில் வைத்து கோப்பாய் போக்குவரத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## பஸ் 'பொடி'களை.........

மீன் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் கைவிடப்பட்ட பஸ் சிதிலங்களை கடலில் இறக்கும் திட்டம் காங்கேசன் துறையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு இடம்பெறுகின்றது.

இது தொடர்பில் இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று மேற்கொண்ட அவசர கலந்துரையாடலின் போதே நாளை மறுதினம் இராமநாதபுரம் பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளும் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்க ஆலோசனைக் கூட்டம் துறைமுக வளாகத்தில் துறைமுக விசைப்படகு மீனவர்சங்கத் தலைவர் என்.தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

இராமேஸ்வரம், மண்டபம், சோலியக்குடி, ஜெகதாப்பட்டினம், கோட்டைப்பட்டினம், சேதுபாவசத்திரம், மல்லிப்பட்டினம், நாகபட்டினம், காரைக்கால் ஆகிய இராமநாதபுரம். புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகை, காரைக்கால் போன்ற பல மாவட்டங்கள் கொரோனாப் பரவலைக் கருத்தில் கொண்டும் தொற்று பரவக்கூடாது என்ற நோக்கத்துடனும் வருகின்ற 30.06.2021 திகதியன்றே தொழிலுக்குச் செல்வது என்று தீர்மானிக்கப்படுகிறது.

தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன் பிடிக்கும் கச்சதீவு பகுதியில் இலங்கை அரசு பழைய பஸ்களின் கூடுகளைக் கடலில் இறக்கி, சுற்றுச்சூழலை பெருமளவு பாதிக்கச் செய்வதுடன் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கத்துடனும் செயல்படும் இலங்கை அரசின் நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய இலங்கை அரசு மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் கடலில் பழைய பஸ்களின் கூடுகளை இறக்குவதைக் கண்டித்தும் தொடர் போராட்டங்கள் நடத்துவது என்றும் முதற்கட்டமாக வருகின்ற 16.06.2021 புதன் காலை 10 மணியளவில் பஸ் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் - 06இற்கான கணித பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.**




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## ரணிலின் எச்சரிக்கை

எல்லா விடயங்களையும் இராணுவப் பாணியில் – இறுமாப்பு அரசியல் போக்கில் – அணுகுவது நாட்டுக்குப் பேரிழப்பை – பேரிடரை – தந்து விடும்.

இராஜதந்திரமும், சாணக்கிய தந்திரோபாயமும் பயன்படுத்த வேண்டிய இடங்களில் அவற்றை சரிவரப் பயன்படுத்தி, நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை தேடித் தருவதே நாட்டுத் தலைவர்களின் பிரதான பொறுப்பாகும்.

அதைத்தான் தேர்ந்த அரசியல்வாதி என்றும் நரித் தந்திரசாலி என்றும் வர்ணிக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் ஆட்சித் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆலோசனையாக எடுத்துக் கூறியிருக்கின்றார்.

அது – அந்த ஆலோசனை – நாட்டின் தலைவருக்கும் அவரைச் சூழ்ந்து நாட்டின் தேசிய அரசியலை முன்னெடுக்கும் முன்னாள், இந்நாள் படை அதிகாரிகள் குழாமுக்கும் புரிந்திருக்குமோ என்னவோ...!

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருக்கும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை இழக்குமாயின் தேசிய பொருளாதாரம் படுபாதாளத்தில் விழும். எனவே அரசியல் காரணிகளுக்கு அப்பால் சென்று நாட்டு மக்கள் மற்றும் நாட்டின் எதிர்காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடி, ஜி.எஸ்.பி. சலுகையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள அரசு முயற்சிக்க வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறியிருக்கின்றார்.

இத்தகைய விவகாரங்களை எப்போதுமே பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்குடன் அணுகி, கையாண்டு, அதில் இறுமாப்பு அரசியல் செய்யும் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் குழுவின் காதில் இந்த ஆலோசனை விழுமா என்பதுதான் கேள்வி. விழுந்தாலும் ஆட்சி அதிகாரத் திமிர்ப் போக்கின் உச்சத்தில், இனவெறியோடு மிதந்து கொண்டிருக்கும் அத் தரப்பு இந்த ஆலோசனையைப் பொருட்படுத்துமா என்பதே கேள்வி.

முன்னைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடமும் இதேபோல கொலைவெறித் தனத்துடன் ஆட்சி அதிகாரத்தை கையாண்டமையால்தான் அப்போதும் இந்த ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை இழந்தது.

தன் நாட்டின் மனித உரிமைகளைப் பேணும் கடப்பாட்டை நிறைவு செய்யாத அரசுக்கு இந்த வரிச் சலுகையை வழங்குவதில்லை என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிந்த முடிவு.

ஜனநாயகத்தை மதித்து, நீதியை நிலைநாட்டி, மனித உரிமைகளைப் பேணினால் மட்டும்தான் இந்தச் சலுகை என்பது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஒட்டுமொத்தத் தீர்மானம்.

2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு வீழ்ந்து கிடந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை மீளப்பெறுவது மிகக் கட்டாயம் என்று கருதிச் செயற்பட்டது.

இழந்த அந்த வரிச்சலுகையை மீளப் பெறுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சு நடத்தியது. பேச்சு நடத்தியது என்பதை விடக் கெஞ்சியது என்று கூறினால் பொருத்தமானது.

சில நிபந்தனைகளுடன் வரிச் சலுகையை மீள வழங்க ஐரோப்பிய ஒன்றியம் சம்மதித்தது.

இலங்கை நாட்டில் மிருகத்தனமான – கொடூரமான – மனிதாபிமானப் பண்புகளுக்கு மாறான – பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அந்தச் சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும். தேவையானால் 'பயங்கரவாதத்தை' அடக்குவதற்காக வேறு நியாயமான சட்டங்கள் கொண்டு வரப்படலாம். அத்துடன் மனிதாபிமானத்தையும், மனித நேயத்தையும் கடைப்பிடிப்பது தொடர்பான தனது சர்வதேசக் கடப்பாட்டை இலங்கை முழு அளவில் நிறைவு செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியது.

இவற்றுக்கெல்லாம் சம்மதித்ததன் பெயரிலேயே 2017 இல் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியது. அதை வைத்துக் கொண்டுதான் நாடு ஓரளவு அந்நிய செலாவணியை ஈட்டி, சமாளித்துக் கொண்டு போகின்றது.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடிச் சென்றோரால் ஈட்டப்படும் அந்நிய செலாவணி குறைந்து – வற்றி வரும் – சூழலில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதி ஒன்றே இலங்கையின் பொருளாதாரம் படுத்துவிடாமல் இருப்பதற்கான ஒரே வாய்ப்பாக உள்ளது.

இந்த வரிச்சலுகையைப் பெறுவதற்கு இலங்கை அளித்த வாக்குறுதிப்படி பயங்கரவாதத் தடைச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்காக நல்லாட்சி அரசின் காலத்தில் எடுக்கப்பட்ட முன் முயற்சிகளை மோசமாக விமர்சித்து, அந்தச் சட்டத்தை தொடர்ந்து நிலைநிறுத்தி, அதன் மூலம் மனித உரிமை மீறல்களையும் இராணுவக் கெடுபிடிப் போக்கையும் தொடரவே கோட்டா அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது.

அந்த நிலைமை தொடர்ந்தால் விரைவில் இந்த வரிச்சலுகையை இலங்கை இழக்கும் ஆபத்து நேரும்.

அப்போது ரணில் விக்கிரமசிங்க கூறுவது போல ரூபாவின் பெறுமதி 300 ரூபாவை எட்டுவது கூட தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இறுமாப்புப் பிடிவாதம் பிடித்த இராணுவ ஆட்சியின் கருத்தில் இந்த எச்சரிக்கை ஏறுமோ, என்னவோ?

# பொதுநிலைப்பாடு ஒன்றுக்கு வருவார்களேயானால் மலையகத் தலைவர்களுடன் கை கோர்க்கத் தயார்!



## கஜேந்திரகுமார் அழைப்பு

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் மலையகத் தலைமைகள் பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு வரும்போது அவர்களுடன் இணைந்து செயற்படுவதில் எவ்வித தடையும் கிடையாதென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அங்கு ஊடகவியலாளர்களை சந்தித்தப்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் கூறியுள்ளதாவது, 'தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும், ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

கடந்த 73 ஆண்டுகளாக வடக்கு- கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

அத்தகைய அடக்குமுறைகள் தற்போது மலையக மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே மலையக தலைமைகள் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள், இத்தகைய நிலைமைகளை உணர்ந்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்தில் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டால் இணைந்து செயற்படுவதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மிகக் குறைந்த எரிபொருள்கள் விலையை தெற்காசியாவில் கொண்ட நாடு இலங்கை

## நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பெருமிதம்



தெற்காசியாவில் மிகக் குறைந்த எரிபொருள்களின் விலையைக் கொண்டுள்ள நாடு இலங்கையே என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கூறினார்.

இது தொடர்பாகத் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இலங்கையில், எரிபொருளின் விலையை அதிகரித்த பின்னரும், தெற்காசியாவில் மிகக் குறைந்த எரிபொருளின் விலையைக் கொண்டுள்ள நாடு இலங்கையே எனத் தெரிவித்துள்ளார்.

# அனுமதிப்பத்திரமின்றி கடலட்டை பிடிப்பு வடமராட்சிக் கடலில் 29 பேர் சிக்கினர்

வடமராட்சி கிழக்கு-குடாரப்பு கடலில் அனுமதியின்றிக் கடலட்டை பிடித்தமைக்காக 29 பேர், கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சந்தேகநபர்கள், கடலட்டையை பிடிப்பதற்காகப் பயன்படுத்திய 11 படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள், கடலட்டை ஆகியவற்றை கடற்படை கைப்பற்றியுள்ளது.

வடமராட்சி கிழக்கு- நாகர்கோவில் குடாரப்பு, மாமுனை ஆகிய பகுதிகளிலுள்ள கடற்கரையில் வாடி அமைத்து, கடலட்டை பிடித்தலில் ஈடுபட்டு வந்த மீனவர்களையே கடற்படை கைது செய்துள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அதிகாரிகளிடம் மீனவர்களையும் கைப்பற்றிய உபகரணங்களையும் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களை, பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளோம் என கடற்றொழில் நீரியல் வளத்திற்கு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு ஊடுருவ முயற்சிக்கும் ஆயுதக்குழு

இலங்கையில் இருந்து ஊடுருவ முயற்சிக்கும் ஆயுதக்குழுவின் அச்சுறுத்தல்கள் வந்தமையையடுத்து தமிழக மாநில காவல்துறை மற்றும் மத்திய புலனாய்வு அமைப்புகள் தமது கண்காணிப்பை அதிகரித்துள்ளன.

ஐ.ஏ.என்.எஸ் செய்திச் சேவை இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை மத்திய புலனாய்வு அமைப்பால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமேஸ்வரம், அத்துடன் சென்னை ஆகிய நகரங்களிலும் காவல் துறையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர். தகவலறிந்த உளவுத்துறை தகவல்களின்படி, ஆயுத மேந்தியவர்களுடன் ஒரு படகு இராமேஸ்வரம் கடற்கரையை நோக்கி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவர்களின் சரியான அடையாளம் மற்றும் அவர்கள் சேர்ந்த அமைப்பு எது என்பது தொடர்பில் தகவல்கள் இல்லை என அந்த உளவுத் துறை தரப்புகள் ஐ.ஏ.என்.எஸ்ஸிடம் தெரிவித்துள்ளன.

சென்னையில் உள்ள மாநில காவல் துறை தலைமையகத்தின் மூத்த காவல் துறை அதிகாரி ஒருவர் ஐ.ஏ.என்.எஸ்ஸிடம் இது தொடர்பில் கருத்துரைத்துள்ளார். எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இதை விட தற்போது தம்மால் எதனையும் வெளிப்படுத்த முடியாது என்று அவர் கூறியுள்ளார் தமிழகத்தின் கடலோரப் பகுதிகளுக்குச் செல்லும் அனைத்து முக்கிய வீதிகளிலும் ஆயுத மேந்திய காவல்துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தமிழ்நாடு கடற்கரையை அடைவதற்கான எந்தவொரு முயற்சியையும் முறியடிக்க கடலோர காவல்படையினரால் கடலில் அதிக கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கேரள காவல் துறையின் புலனாய்வுத் தரப்பு, நிறுவனங்களிடம் இருந்து கிடைத்த தகவல்களுக்குப் பின்னரே தமிழக கடலோர நகரங்கள் முழுவதும் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.



# சிறிய குழு உலகிற்கு ஆணையிட முடியாது

## ஜி–7 மாநாட்டை பகிரங்கமாக விமர்சித்த சீனா

சீனாவின் திடீர் வளர்ச்சி சர்வதேச அரசியலை புரட்டிப்போடும் அளவிற்கு மாற்றியுள்ள நிலையில், பிரிட்டனில் நடந்த ஜி–7 மாநாடு சர்வதேச கவனத்தை பெற்றுள்ளது. அதாவது, ஜி–7 உச்சி மாநாட்டில் சீனா வுக்கு போட்டியாக சில திட்டங்களை செயல் படுத்த ஆலோசனை நடத்துகின்றனர். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு உதவ, சீனாவின் திட்டத்தை போன்று ஒரு திட்டத்தை உருவாக்க ஜி–7 நாடுகளின் தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

பெல்ட் அண்ட் ரோட் இனிஷியேட்டிவ் என்ற திட்டத்தின் கீழ் பல நாடுகளுக்கு ரயில் பாதைகள், சாலைகள் மற்றும் துறைமுகங்கள் கட்ட அவற்றுக்கு பொருளாதார ரீதியாக சீனா உதவி செய்து வருகிறது. ஆனால், இதனால் சில நாடுகள் அதிக கடன் சுமைக்கு ஆளாகும் சூழல் உருவாவதாக விமர்சிக் கப்படுகிறது. எனவே, அதற்கு போட்டியாகவே ஜி–7 தலைவர்கள் புதிய திட்டத்தை கொண்டு வர முடிவு செய்துள்ளனர்.

புதிய திட்டத்தின் மூலம், கொள்கைகளால் செயல்படும், அதிக தரம் கொண்ட மற்றும் வெளிப்படையான கூட்டாண்மையை தரவுள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிலையில், ஜி–7 மாநாட்டை சீனா பகிரங்க மாக விமர்சனம் செய்துள்ளது. சில நாடுகள் மட்டுமே கொண்ட சிறிய குழுவானது, உலகளாவிய முடிவுகள் தொடர்பாக ஆணையிட்ட காலம் போய்விட்டது என்று லண்டனில் உள்ள சீனத் தூதரக செய்தித் தொடர்பாளர் கூறி உள்ளார்.

கொரோனா போன்ற பேரழிவு மீண்டும் நிகழாமல் இருக்க அனைத்து வளங்களையும் பயன்படுத்த ஜி–7 தலைவர்கள் உறுதி. 'நாடுகள் சிறியதோ அல்லது பெரியதோ, வலுவானதோ அல்லது பலவீன மானதோ, ஏழை நாடோ அல்லது பணக்கார நாடோ, எல்லோரும் சமம். எல்லா நாடுகளும் ஒன்றாக சேர்ந்து ஆலோசிக்க வேண்டும். சர்வதேச முடிவுகளை அப்படித்தான் எடுக்க வேண்டும்' என்றும் அவர் கூறினார்.

## சிரியா மருத்துவமனையில் ஏவுகணை விழுந்ததில்

### 13 பேர் பலி; 27 பேர் காயம்

சிரியா நாட்டில் பல ஆண்டுகளாக உள் நாட்டுப் போர் நடந்து வருகிறது. அரசுக்கு எதிராக கிளர்ச்சிப் படைகள், குர்தீஸ் படைகள், துருக்கி ஆதரவுப் படைகள் எனப் பல குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவர்கள் பல்வேறு பகுதிகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இதில் ஹாதே பகுதி துருக்கி ஆதரவுப் படைகள் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள அப்ரின் நக ரில் உள்ள மருத்துவமனையில் 2 ஏவுக ணைகள் வந்து விழுந்தன. இதில் மருத்துவமனை ஊழியர் கள் 4 பேர் மற்றும் நோயாளிகள் என 13 பேர் உயிரிழந்தனர். 27 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை. குர்தீஸ் படையினர்தான் தாக்கு தல் நடத்தி இருக்கலாம் என அரச தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் அரசு படைகள் தான் ஏவுகணைகளை வீசின என அந்த பகுதியை கட்டுப்பாட் டில் வைத்துள்ள துருக்கி ஆத ரவுப் படையினர் குற்றம்சாட்டி உள்ளனர்.

## சீனாவில் எரிவாயு 'பைப்' வெடித்து 12 பேர் சாவு

சீனாவின் ஹுபேய் மாகாணம் ஷியான் நகரில் உள்ள குடியிருப்புப் பகுதியில் இன்று எரிவாயு குழாய் பயங்கர சத்தத்துடன் வெடித்து விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் மார்க்கெட் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்தது, கடைகளில் வேலை செய்தவர்கள், பொருள்கள் வாங்க திரண்டிருந்த மக்கள் என ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். அருகில் உள்ள கட்டடங்களின் ஜன்னல்களும் உடைந்தன.

விபத்து பற்றி தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 138 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அரசு ஊடகமாக சி.சி.டிவி தெரிவித்துள்ளது. அப் பகுதியில் உள்ள கட்டடங்களில் வசித்த சுமார் 150 பேர் வெளியேற்றப்பட்டனர். காயமடைந்தவர் களில் பலருக்கு அதிக அளவில் இரத்தம் வெளி யேறியதால், அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக் கப்படுகிறது. பொதுமக்கள் இரத்த தானம் செய் யும்படி மருத்துவமனைகள் கேட்டுக்கொண்டுள்ளன.



## ஜி-7 மாநாட்டின் நிறைவில்

# எலிசபெத் ராணியுடன் ஜோபைடன் சந்திப்பு

### ஜி–7 நாடுகள் கூட்டமைப்பின் 47 ஆவது மாநாடு இங்கிலாந்தில் நடந்தது

கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய இந்த மாநாடு நேற்று நிறைவு பெற்றது. இந்த மாநாட்டில் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகள் மற் றும் ஐரோப்பிய யூனியன் அமைப்பின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந் தியா சார்பில் பிரதமர் மோடி காணொலி மூலம் பங்கேற்று பேசினார்.

3 நாள் நடந்த இந்த மாநாட்டில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அமெரிக்க அதிபர் ஜோபை டன், இங்கிலாந்துப் பிரதமர் போரிஸ் ஜான்சன் உள்ளிட் டோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக் களைப் பகிர்ந்து கொண்டனர்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்கு 100 கோடி தடுப்பூசிகள் வழங்கு வது, பருவநிலை மாற்றத்தி லிருந்து உலகை பாதுகாப் பது போன்றவை இந்த மாநாட்டின் முக்கிய அம்சங்க ளாக இருந்தன.

இங்கிலாந்து ராணி எலிசபெத்தும் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அவரை ஜி–7 மாநாட்டில் பங்கேற்ற தலைவர்கள் சந் தித்து பேசுவதில் ஆர்வமாக இருந்தனர்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், அமெரிக்காவில் இருந்து விமானத்தில் இங் கிலாந்து புறப்படும் போதே எலிசபெத் ராணியை சந் திக்க ஆர்வமாக இருக்கிறேன் எனக் கூறினார். அவர் என் அம்மாவின் தோற்றத்தில் இருக்கிறார் என்று புகழ்ந்தார். இங்கி லாந்து வந்த ஜோபை டன் மாநாடு முடிந்ததும் எலிசபெத் ராணியை நேரில் சந்திக்கத் திட்டமிட்டு இருந்தார். முன்னதாக மாநாட்டுக்கு வந்திருந்த உலக தலைவர் கள் அனைவரும் சந்தித்து கொண்டனர்.

பின்னர் ஜோபைடன் தனது மனைவியுடன் சென்று இங்கி லாந்து ராணி எலிசபெத்தை அரண்மனையில் சந்தித்தார். பின்னர் அவர்கள் அரண் மனையின் வெளியே மாடங்க ளுக்கு இடையே உள்ள நடை பாதையில் பேசிக்கொண்டே நடந்து சென்றனர். நேற்று இந்தச் சந்திப்பு நடந்தது. ராணி எலிசபெத்தின் மகன் சார்லஸ் அவரது மனைவி கமிலா ஆகியோருடனும் உரை யாடினார்கள். எலிசபெத் ராணி யுடனான சந்திப்பு மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக ஜோபைடன் தெரிவித்தார்.



## அமெரிக்காவின் பைஸர் தடுப்பூசிக்கு வியட்நாம் அரசு ஒப்புதல் அளித்தது

சீனாவின் வுகான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பர் இறுதியில் முதல் முறையாக கொரோனாப் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. அதன்பின், உலக நாடுகள் முழுவதும் பரவியது.

தற்போது உலகம் முழுதும் கொரோனாவால் பாதிக் கப்பட்டோர் எண்ணிக்கை 17 கோடியைத் தாண்டியுள்ளது.

இந்தக் கொடிய வைரஸை ஒழிப்பதற்கு தடுப்பூசி ஒன்று மட் டுமே தீர்வு என்பதை உணர்ந்த உலக நாடுகள் தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் முழுவீச்சில் இறங்கின. தற்போது உலக ஆராய்ச்சியாளர்கள் போராடி, கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளை கண்டறிந்துள்ள னர். இதன்படி ரஷ்யாவின் ஸ்புட் னிக் வி, அமெரிக்காவின் மாடர்னா, இந்தியாவின் கோவேக் சின், கொவிஷீல்டு உள்ளிட்ட பல தடுப்பூசிகள் தற்போது பயன்பாட் டில் உள்ளன.

இந்நிலையில், வியட்நாமில் அமெரிக்காவின் பைஸர் தடுப் பூசியை அவசரத் தேவைக்குப் பயன்படுத்த அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## சிறப்பு அனுமதியுடன் தனி விமானத்தில் அமெரிக்காவுக்குப் பறக்கிறார் ரஜினிகாந்த்

நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் தற்போது 'அண்ணாத்த' திரைப்படம் உருவாகிவருகிறது. ரஜினிகாந்துக்கு உடல் நிலை சரியில்லாதபோது, அமெரிக்காவில் சிகிச்சை எடுத்துக்கொண்டு திரும்பிவந்தார். அதற்குப் பின்பே மீண்டும் நடிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினார். தொடர்ச்சியாகப் படங்கள் நடித்து வந்தாலும், அவ்வப்போது அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காகச் சென்றுவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

தற்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, வெளிநாட்டுக்கு சிகிச்சைக்குச் செல்லாமல் இருந்தார். அமெரிக்காவில் கொரோனாத் தொற்று வெகுவாகக் குறைந்துவிட்டதால் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் ரஜினிகாந்த் அமெரிக்காவுக்குப் பயணிக்கவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவிலிருந்து வருபவர்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது அமெரிக்கா. இதனால், தனி விமானம் மூலம் ரஜினிகாந்த் அமெரிக்காவுக்குப் பயணிக்கவுள்ளார் என்றும் இதற்காக இந்திய மத்திய அரசிடம் அனுமதி கோரி, அரசும் அனுமதி வழங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.



எனவே, ரஜினிகாந்த் ஜூன் 20 ஆம் திகதி சென்னையிலிருந்து தனிவிமானம் மூலம் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார் என்றும் ரஜினிகாந்துடன் அவருடைய குடும்பத்திலிருந்து யார் செல்லவுள்ளார்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை என்றும் யாரேனும் ஒருவர் மட்டும் செல்வார் எனவும் சொல்லப்படுகிறது. அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து, சிறிது காலம் ஓய்வெடுத்துவிட்டுதான் ரஜினிகாந்த் இந்தியா திரும்ப திட்டமிட்டுள்ளார் என்று அவரது குடும்பத்தினரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.



## இந்தியாவில் ஒருநாள் பாதிப்பு
# 70 ஆயிரமாக குறைவு

இந்தியாவில் கொரோனா பாதிப்பின் இரண்டாவது அலை மெல்ல மெல்ல கட்டுக்குள் வரத் தொடங்கியுள்ளது. அந்தவகையில் தொடர்ச்சியாக ஏழாவது நாளாக இன்றும் கொரோனா பாதித்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு கீழ் பதிவாகியுள்ளது.

நேற்று 80,834 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்ட நிலையில், மேலும் 3,303 பேர் கொரோனாவுக்கு பலியானார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 70,421 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இன்று காலை வரையான கடந்த 24 மணி நேரத்து தரவுகள் தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 72 நாள்களில் இல்லாத குறைந்த அளவாக புதிதாக 70 ஆயிரத்து 421 பேர் மட்டுமே கொரோனாப் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். இதனால் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 கோடியே 95 லட்சத்து 10 ஆயிரத்து 410 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனா பாதிப்பால் ஒரே நாளில் மேலும் 3,921 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 3,74,305 ஆக உயர்ந்து உள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 501 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனால் மொத்த குணமடைந்தோர் எண்ணிக்கை 2 கோடியே 81 லட்சத்து 62 ஆயிரத்து 947 ஆக உயர்வடைந் துள்ளது. கொரோனா பாதிப்பு காரணமாக தற்போது 9,73,158 பேர் சிகிச்சை பெற்று வரு கின்றனர். இந்தியாவில் இதுவரை செலுத்தப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 25 கோடியே 48 லட்சத்து 49 ஆயிரத்து 301 ஆக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாலியல் புகாரில் சிக்கிய சிவசங்கர் பாபாவின் சர்வதேசப் பாடசாலையிலிருந்து
## மாணவர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து விலகல்

பாலியல் புகாரில் சிக்கிய சிவசங்கர் பாபா நடத்தும் பாடசாலையில் இருந்து ஐம்பது சதவீத மாணாக்கர்கள் விலகிச் சென்றுவிட்டனர் எனவும் கூறப்படும் நிலையில், பத்துக்கும் மேற்பட்ட ஆசிரி–யர்களும் இராஜினாமாச் செய்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையை அடுத்த கேளம்பாக்கம் அருகே உள்ள சுசில் ஹரி சர்வதேசப் பாடசாலையை நடத்தி வரும் சிவசங்கர் பாபா, தன்னை கடவுளின் அவதாரம் என அழைத்துக்கொண்டு பள்ளியில் பயிலும் மாணவிகளை பக்தையென கூறி பாலியல் கொடுமைகளில் ஈடுபடுகிறார் என புகார் எழுந்தது. 3 மாணவிகள் அளித்த புகாரின் அடிப்படையில் போக்சோ உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் சிவசங்கர் பாபா மீது வழக்குப் பதிவு செய்து, அந்த வழக்கு சி.பி. சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப் பட்டது.

இவ்வழக்கில் சி.பி.சி. ஐ.டியைச் சேர்ந்த டி.எஸ்.பி. குணவர்மன், காவல் ஆய்வாளர் ஜெயசங்கர் ஆகியோர் விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு விசாரணையைத் தொடங்கியுள்ளனர். வழக்குத் தொடர்பான ஆவணங்களை செங்கல்பட்டு மாவட்ட காவல்துறையிடம் இருந்து பெற்று இவர்கள் புதிதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதனிடையே, இந்த பாடசாலையில் பிள்ளைகளைப் படிக்க வைக்கும் பெற்றோர், பாடசாலைக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தால் கலக்கம் அடைந்துள்ளனர். இதைத் தொடர்ந்து அங்கிருந்து தமது பிள்ளைகளை வெளியேற்றி, வேறு பாடசாலைகளில் சேர்க்கத் தொடங்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது. இவ்வாறான மாணவர் விலகல் தொடர்ச்சியாக நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பாடசாலையில் பணியாற்றி வந்த ஆசிரியர்களிலும் பத்துக்கும் மேற்பட்டோர் ராஜினாமாச் செய்துவிட்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



## குஜராத் சட்டசபைத் தேர்தலில் ஆம் ஆத்மி தனித்தே போட்டி!
### கட்சித்தலைவர் கெஜ்ரிவால் அதிரடி அறிவிப்பு



குஜராத் மாநிலத்தில் மொத்தமுள்ள 182 தொகுதிகளுக்கும் அடுத்த வருடம் டிசெம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தத் தேர்தல், ஆளும் பா.ஜ.கவுக்கு மிகுந்த சவாலாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய எதிர்க்கட்சிகள் குஜராத்தில் ஆட்சியைக் கைப்பற்ற முனைப்புக் காட்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில், 2022 குஜராத் சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 182 தொகுதிகளிலும் ஆம் ஆத்மி கட்சி தனித்தே போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைவரும் டெல்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால் இன்று அதிரடியாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு இந்தியத் தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் சென்றுள்ள அரவிந்த் கெஜ்ரிவால், அம்மாநிலத்தின் நவ்ராங்ப்பூர் பகுதியில் ஆம் ஆத்மி கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தை இன்று திறந்து வைத்தார்.

அதன்பின்னர் பேசிய கெஜ்ரிவால், இந்த அறிவிப்பை விடுத்தார். பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுமே ஒரேமாதிரியானவைதான்! என்று விமர்சித்த கெஜ்ரிவால், குஜராத் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர் என்றும் தெரிவித்தார்.

குஜராத் மாநிலத்தின் பிரபல செய்தித் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக செயல்பட்டு வந்த இஷுதன் காத்வி என்பவர் ஆம் ஆத்மி கட்சியில் இணைந்துள்ள நிலையில் அவரைக் 'குஜராத்தின் கெஜ்ரிவால்' என்று அரவிந்த் கெஜ்ரிவால் புகழாரம் செய்தார்.

டெல்லி வழிமுறையே குஜராத்திலும் பின்பற்றப்படுமா? என்ற ஊடகவியலாளர் கேள்விக்குப் பதிலளித்த கெஜ்ரிவால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்துவம் உள்ளது. குஜராத் வழிமுறை என்பது குஜராத் மக்களால் முடிவு செய்யப்படும் என்றார்.

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு ஒட்சிசன் வழங்கும் உபகரணம்

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வைத்தியசாலைக்கு கொரோனா சிகிச்சையளிப்புக்கான முக்கிய வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோனா நிலைமை காரணமாக மட்டு போதனா வைத்தியசாலையில் இன்னும் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களுள் 20 பேர் ஒட்சிசன் தேவையுடையோராக காணப்படுகின்றனர்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 93ஆம்ஆண்டு பிரிவு மாணவர்கள் சிலோன் கொலிஜ் நிறுவனத்தின் ஊடாக 20 லட்சம் ரூபா பெறுமதியான ஒட்சி சன் வழங்கும் உபகரணம் வைத்தியசாலைக்கு கையளிக்கும் நிகழ்வு மட்டு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய நிபுணர் திருமதி.க.கலாரஞ்சினி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

# விசேட தேவையுடையவர்களுக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கல்



ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 222 விசேட தேவையுடையவர்களுக்கான 5,000 ரூபா கொடுப்பனவு மற்றும் பொதுசன மாதாந்த உதவிப்பணம்வழங்கும் நடவடிக்கைகள் தொடராக இடம்பெறுகின்றன.

நாட்டில் பயணத் தடை உள்ள போதும் மக்களுக்கான நிவாரணப் பணிகள் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் பல்வேறு கொடுப்பனவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கிராம உத்தியோகத்தர்கள் கிராமத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று இப்பணத் தொகையினை வழங்கி வைத்து வருகின்றனர். பணத்தை பெறுகின்ற மக்களும் வழங்கும் கிராம உத்தியோகத்தர்களும்

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பில் உயிரிழந்த நிலையில் யானையொன்று மீட்கப்பட்டது

மட்டக்களப்பில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு செங்கலடி கித்துல் காட்டுப் பகுதியிலேயே குறித்த யானை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏற்கனவே கித்துல் காட்டுப் பகுதியில் கடந்த 2 தினங்களுக்கு முன்னதாக யானை தாக்கி ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் யானை தாக்குதலில் ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் சாவு

திருகோணமலை – எத்தாபெந்திவெவ பகுதியில் ஓய்வு பெற்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் யானையின் தாக்குதலினால் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளனர் என மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான டபிள்யூ. தஸநாயக்க (63 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கதுருவெவ எனும் இடத்திலுள்ள வயலினைத் துப்புரவு செய்வதற்கு சென்ற போது யானை தாக்கிய நிலையில் விழுந்து கிடந்துள்ளார் எனவும் மாலையாகிய போதும் வீட்டுக்கு வராததை அடுத்து வயலுக்குச்சென்றுபார்த்தபோதுயானையின் தாக்குதலினால் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணையின்மூலம்தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதோடு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.



# அம்பாறை கடற்கரையோரங்களை துப்புரவு செய்யுமாறு கோரிக்கை

அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள் அதிகளவாக தென்படுவதைக் காணமுடிந்தது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு முதல் கல்முனை உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவு அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடித் தொழிலுக்கு பெரும் சிரமங்களை கொடுப்பதுடன்வலைகளிலும் சிக்கி வருகின்றன.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரண்டிக்ஸ் பணியாளர்கள் 58 பேருக்கு கொரோனா தடுப்பூசி



படுவான்கரைப் பிரதேச பாடசாலையான, நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தில் பெர்ண்டிக்ஸ் பணியாளர்கள் 58 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

இத் தடுப்பூசியானது நேற்று மாலை 4.58 மணியளவில் மருத்துவர் அனெட் ஜோதி லக்ஸ்மி தலைமையில் நடைபெற்றது.

தடுப்பூசி நாவற்காடு, ஈச்சந்தீவு, விளாவெட்டுவான், கரவெட்டி, மகிழவெட்டுவான், போன்ற கிராமத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது .

# மட்டக்களப்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி

மட்டக்களப்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான கொவிட் – 19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்னுரிமைக்கு அமைய மட்டக்களப்பு பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கான தேவைப்பாடுகள் குறித்த விளக்கங்கள் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து இந்த தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு வீதம் அதிகரித்துச் செல்லும் நிலையில் சுற்று நிரூபத்திற்கு அமைய இந்த கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.



எவ்வாறாயினும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரத் துறையினரால் தொடர்ச்சியாக தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் நோவக் ஜோகோவிச் சம்பியன்



## தனது டென்னிஸ் மட்டையை சிறுவனுக்கு பரிசளித்தார்!

'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபின் டென்னிஸ் தொடர் பாரிஸ் நகரில் கடந்த இரு வாரங்களாக நடந்து வந்தது. தொடரின் இறுதி நாளான நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் 'முதல்நிலை' வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் ஐந்தாம் நிலை வீரரான கிரீஸ் நாட்டின் சிட்சிபசும் மோதினர்.

இதில் தொடக்கத்தில் இருந்தே யாருக்கு வெற்றி என்பதில் பலத்த போட்டி ஏற்பட்டது. இதில், முதல் இரண்டு செட்டுகளை சிட்சிபஸ் கைப்பற்றினார். இதனால், அவர் வெற்றி பெறும் சூழல் காணப்பட்டது.

எனினும், அடுத்த 3 செட்களையும் ஜோகோவிச் கைப்பற்றி வெற்றியைத் தன்வசப்படுத்தினார். இதனால், 6-7, 2-6, 6-3, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் சிட்சிபசை வீழ்த்தி பிரெஞ்சு ஓபின் சம்பியன் பட்டத்தை நோவக் ஜோகோவிச் தட்டிச்சென்றார். இருவருக்கும் இடையேயான இந்த இறுதிப் போட்டி 4 மணித்தியாலத்துக்கும் கூடுதலாக நடந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டியில் வெற்றிபெற்ற பின்னர் தனது டென்னிஸ் மட்டையை மைதானத்தில் பார்வையாளராக நின்றுகொண்டிருந்த தனது ரசிகனான ஒரு சிறுவனுக்கு ஜோகோவிச் வழங்கினார். அதனை எதிர்பாராத அந்தச் சிறுவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான்.

தனது டென்னிஸ் மட்டையை அன்பளிப்பாகக் கொடுத்தமை தொடர்பாகத் தெரிவித்த ஜோகோவிச், போட்டி முழுவதும் அந்தச் சிறுவனின் பேச்சு எனது காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது. அவன் என்னை ஊக்கப்படுத்தி னான். உண்மையைச் சொல்லப்போனால் அவன் எனக்கு வியூகங்களைக் கூறினான். அப்பட்டமாகக் கூறுவதானால், அந்தச் சிறுவன் எனக்குப் பயிற்சியளித்தான்" என்று குறிப்பிட்டார்.

# கோபா அமெரிக்கா 2021 கால்பந்தாட்டத் தொடர் கொலம்பியாவும் பிரேஸிலும் வெற்றிபெற்றன



இன்று அதிகாலை நடைபெற்ற கோபா அமெரிக்கா 2021 கால்பந்தாட்டத் தொடரின் பிரிவு பி போட்டியொன்றில் கொலம்பியாவும் ஈக்வடோரும் மோதியிருந்தன. இந்தப் போட்டியில் 42 ஆவது நிமிடத்தில் எட்வின் கார்டோனா அடித்த ஒரு அபாரமான கோலினால் ஈக்வடோரை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது கொலம்பியா.

7 மாதங்களுக்கு முன்பாக உலகக்கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டியில் ஈக்வடோர் அணி கொலம்பியாவை 6-1 என்ற கோல் கணக்கில் அடித்து வீழ்த்தியிருந்தது. இதனையடுத்து கொலம்பியப் பயிற்சியாளர் கார்லோஸ் குயிரோஸ் வெளியேற்றப்பட்டார். இப்போது ரெய்னால்டோ ருயீடா அந்த அணியின் பயிற்சியாளராக இருக்கிறார். நட்சத்திர கொலம்பிய வீரரான ஜேம்ஸ் ரோட்ரிக்ஸை கோபா அமெரிக்கத் தொடருக்கான அணியிலிருந்து அவர் நீக்கியது பெரும் விமர்சனங்களுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. வரும் வியாழனன்று கொலம்பிய அணி வெனிசுலாவைச் சந்திக்கவுள்ளது.



மற்றொரு ஆட்டத்தில் பிரேசில்-வெனிசுலா அணிகள் மோதின. இதில் பிரேசில் முழு ஆதிக்கம் செலுத்தி 3-0 என்ற கோல் கணக்கில் வெனிசுலா அணியை வீழ்த்தியது.

பிரேஸிலியாவில் நடைபெற்ற இந்த விறுவிறுப்பான ஆட்டத்தில் பிரேஸில் அணியில் மார்கின்ஹோஸ் 23 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து ஆரம்பித்துவைத்தார். நெய்மர் ஜூனியர் 64 ஆவது நிமிடத்தில் பெனால்டி கோலும், பிறகு நெய்மரின் அபார உதவியுடன் கப்ரியல் பார்போஸா மூன்றாவது கோலையும் அடித்தனர்.

வெனிசுலா அணியில் முக்கிய வீரர்கள் கொவிட்-19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால் விளையாட முடியாமல் போக அந்த அணி பின்னடைவைக் கண்டது. 8 வீரர்கள் தனிமைப்படுத்தப்பட, முற்றிலும் வேறு 15 வீரர்களை கடைசி நேரத்தில் களமிறக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு வெனிசுலா தள்ளப்பட்டது.

அடுத்ததாக பெரு அணியை வியாழனன்று சந்திக்கிறது பிரேஸில்.



# டெஸ்ட் தரவரிசையில் நியூசிலாந்து அணி மீண்டும் முதலிடத்தில்

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.)வெளியிட்டிருக்கும் டெஸ்ட் அணிகளுக்கான புதிய தரவரிசையில் நியூசிலாந்து அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

போட்டித்தொடர்களுக்குத் தக்கபடி சர்வதேச கிரிக்கெட் சபை அவ்வப்போது அணிகள் மற்றும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி தற்போது வெளியிடப்பட்டிருக்கும் டெஸ்ட் அணிகளுக்கான புதிய தரவரிசையில் முதலிடத்தில் இருந்த இந்தியா இரண்டாவது இடத்துக்குச் சரிந்துள்ளது, இரண்டாவது இடத்தில் இருந்த நியூசிலாந்து அணி மீண்டும் முதல் இடத்துக்கு முன்னேறியிருக்கிறது.

சமீபத்தில் இங்கிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 1999ஆம் ஆண்டுக்கு பின்னர், இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து நியூசிலாந்து அணி தொடரை வெல்வது இதுவே முதல் முறையாகும். இங்கிலாந்து மண்ணில் நியூசிலாந்து வெல்லும் 3 ஆவது தொடராகவும் இது அமைந்தது.

அதேபோல இங்கிலாந்து அணி 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சொந்த மண்ணில் சந்திக்கும் முதல் டெஸ்ட் தொடர் தோல்வியாகவும் இது அமைந்தது. 2014 ஆம் ஆண்டு இலங்கை அணியிடம் அது தோல்வியைச் சந்தித்தது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து 123 புள்ளிகளுடன் டெஸ்ட் தரவரிசையில் நியூசிலாந்து அணி முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியா (121) இரண்டாவது இடத்தையும், ஆஸ்திரேலியா (108) மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

நியூசிலாந்திடம் தொடரை இழந்த இங்கிலாந்து (107) 4 ஆவது இடத்தையும், பாகிஸ்தான் (94) 5, மேற்கிந்தியத் தீவுகள் (84) 6 ஆவது, தென்னாபிரிக்கா (80) 7 ஆவது, இலங்கை (78) 8 ஆவது, பங்களாதேஷ் (46) 9 ஆவது, சிம்பாப்வே (35)10 ஆவது இடங்களையும் பிடித்துள்ளன.

வரும் ஜூன் 18 ஆம் திகதி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணிக்கு எதிராக இந்திய அணி விளையாட இன்னும் சில தினங்களே இருக்கும் நிலையில் உலகத் தரவரிசையில் நியூசிலாந்து அணி முதலிடத்தை பிடித்துள்ளமை அந்த அணி வீரர்களுக்கு உத்வேகத்தை அளித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தனியாருக்குச் சொந்தமான காணியில் மாளிகை அமைத்து அரசு குத்தகைக்கு விடுவதை ஒருபோதும் ஏற்கமுடியாது

## கஜதீபன் கடும் சீற்றம்



**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,ஜீன் 14

ஜனநாயக நாட்டிலே தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மாளிகையை அரசாங்கம் அமைத்து அதனை குத்தகைக்கு விடுகின்றமை என்பதை ஒருபோதும் ஏற்க முடியாதென வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்தார்.

கீரிமலை ஜனாதிபதி மாளிகை விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

கீரிமலையில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகை குத்தகைக்கு விடப்படப்போவதாக நாம் அறிகின்றோம். ஒரு ஜனநாயக நாட்டில் தனியாருக்குச் சொந்தமான 100 பரப்பளவுக்கு மேற்பட்ட காணிகளை அரசாங்கம் வெளியாருக்கு குத்தகைக்கு விடுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது .

தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மாளிகையை அரசாங்கம் அமைத்து அதனை குத்தகைக்கு விடுவது என்பதை ஒருபோதும் ஏற்க முடியாது.

வடக்கு மாகாணசபை நடைமுறையில் இருந்தபோது இந்த மாளிகையை வடக்கு மாகாணசபை பராமரிக்க அதனை ஒப்படைக்குமாறு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது .அதனை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அப்போது இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அப்போதிருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அனுப்பியிருந்தார்.

நாம் வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்தோம். அதை பெற்றிருக்க நாம் அன்று சில அழுத்தங்களை வழங்கியிருக்கலாமோ என்று தற்போது யோசிக்கிறோம். துரதிஷ்டவசமாக அது நடக்கவில்லை

வலிகாமம் வடக்கில் 2015 இற்கு முன்பாக 6 ஆயிரத்து 380 ஏக்கர் நிலப்பரப்பு சிறிது சிறிதாக விடுவிக்கப்பட்டு தனியாருக்குச் சொந்தமான 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்றும் அரச கட்டுப்பாட்டில் உள்ளன.

மக்களுக்குச் சொந்தமான காணிகளை விட வேண்டிய தேவையுள்ள நிலையிலே இப்படியான செயற்பாடுகள் துன்பத்தில் உள்ள மக்களை மேலும் துன்பத்தில் தள்ளும் செயற்பாடாகவே அமையும். இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுசேர்ந்து ஒரு தீர்க்கமான முடிவை நாம் எடுப்போம். - என்றார்.

# சாகரவுக்கு எதிராக ஒழுக்காற்று பாய்ச்சல்

## மொட்டு கட்சியின் பங்காளிகள் தீர்மானம்

*ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தின் செயற்பாடு ஆளும் தரப்பு பங்காளிக் கட்சிகள் இடையே கடும் கோபத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.*

*இந்நிலையில், இது விடயம் தொடர்பாக ஆளும் தரப்பு பங்காளிக் கட்சிகள் கூடி ஆராய்ந்துள்ளன.*

*எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பிலான அறிவிப்பையடுத்து, 'வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சுப் பதவியைத் துறக்க வேண்டும்' - என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்திருந்தார்.*

*இதனையடுத்து ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அமைச்சர் விமல் வீரவன்ஸவின் இல்லத்தில் இடம்பெற்றது.*

*இதன்போது, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உருவாக்கத்தில் அதிக பங்களிப்பைச் செலுத்தியவர்கள் என்ற ரீதியில் இந்த அரசில் எமக்கே அதிக உரிமைகள் உள்ளன. இந்த அரசைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டுக்கொண்டுள்ளோம்.*

*ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு அரசைப் பலவீனப்படுத்துவது ஏன் என்பது தொடர்பாக ஜனாதிபதியும், பிரதமரும் ஆராய வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.*

*அத்தோடு சாகர காரியவசம் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பிரதமர் பின்வாங்கக்கூடாது எனவும், சாகர காரியவசம் தொடர்பாக உடனடியாக விசாரணை ஒன்றை நடத்தி இதற்கான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்கப் பிரதமர் வலியுறுத்தவேண்டும் எனவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.*

# ஜனாதிபதியையும் பிரதமரையும் வழிநடத்தும் மறைகரம் எது?

## உதய கம்மன்பில கேள்வி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை அசௌகரியத்துக்கு உட்படுத்தும் அந்த மறைகரம் எது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற வரும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

எரிபொருள்களுக்கான விலைகள் உயர்த்தப்பட்டமை தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் கருத்து வெளியிட்டிருந்தார்.

மக்களை அசௌகரியத்துக்கு உட்படுத்தும்வகையில்எரிபொருள் விலைகளை உயர்த்திய அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டுமென அவர் எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் கம்மன்பில தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

எரிபொருள்களுக்கான விலை உயர்த்தப்படுவதற்கு பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் எழுத்து மூல அனுமதி அவசியமானது என்பது கூட தெரியாத ஒருவரே பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளராக கடமையாற்றி வருகின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமரின் படத்தை தாங்கிய கடித தலைப்புடனான தாளில் எரிபொருள் விலை ஏற்றம் தொடர்பில் விமர்சனம் செய்தமை மூலம் அவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையே விமர்சனம் செய்துள்ளார் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கூடிய வாழ்க்கைச் செலவு குறித்த துணை அமைச்சுக் குழுவாலேயே எரிபொருள் விலையேற்றம் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அதனைக்கூட புரிந்து கொள்ள முடியாத ஒருவர் பொதுஜன முன்னணியின் முக்கிய பதவி வகித்து வருகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இவ்வாறான கருத்து வெளியிட்டிருந்தால் அவருக்கு விசர் என்று அதை பொருட்படுத்தியிருக்கத் தேவையில்லை எனவும், கட்சியொன்றின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இவ்வாறு கருத்து வெளியிடுவதை உதாசீனம் செய்ய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் எடுத்த தீர்மானத்தை ஊடகங்களின் முன்னிலையில் அறிவித்ததைத் தவிர வேறு எதனையும் தாம் செய்யவில்லை எனவும் ஜனாதிபதியும் பிரதமரையும் அசௌகரியத்துக்கு உட்படுத்த செயற்படும் அந்த மறைகரம் எது என்பது கண்டறியப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த எரிபொருள் விலையேற்றம் பற்றிய அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிக்க தாம் தயார் எனவும், சாகர காரியவசம் முடிந்தால் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வர வேண்டும் எனவும் இதனை ஒரு சவாலாக விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயற்பாடுகளின் பின்னணியில் பஸில் ராஜபக்ஷ செயற்படுகின்றாரா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, தமது பின்னணியில் பஸில் இல்லை எனவும் சாகர பின்னணியில் பஸில் இருக்கின்றாரா தெரியவில்லைஅதனைஆராய்ந்து தான் பார்க்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

சாகர காரியவசம் தம்மை பதவி விலகுமாறு கோரியதன் மூலம் அவரது அறிவு மட்டத்தை நாட்டு பொதுமக்களுக்கு அம்பலப்படுத்தியுள்ளார் என உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.

# தலைவர் பிரபாகரன் ஓர் அன்பான குடும்ப மனிதர்; 'நந்திக்கடலுக்கான பாதை' நூலில் கமால் புகழாரம்

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்னவால் வெளியிடப்பட்டிருந்த 'நந்திக்கடலுக்கான பாதை' எனும் புத்தகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பற்றி பல்வேறு தகவல்களை பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த நிலையில், 'நந்திக்கடலுக்கான பாதை ' என்ற புத்தகத்தை கமால் குணரத்ன 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எழுதியிருந்தார். அந்த புத்தகம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில்,குறித்த புத்தகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பற்றி கமல் குணரத்ன தெரிவித்துள்ள விடயங்களை தற்போது இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த புத்தகத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பற்றி, பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன பதிவு செய்துள்ளவை வருமாறு-

'பிரபாகரன் அவர்கள் தனக்குள்ளேயும் தன்னைச் சுற்றியும் கடுமையான ஒழுக்கத்தைப் பேணியவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண் போராளிகளை அவர் தவறாகப் பயன்படுத்தியமைக்கு எந்த ஒரு சான்றுமே கிடையாது. அவர், ஓர் அன்பான குடும்ப மனிதராக இருந்தார்.

பிரபாகரனிடத்திலிருந்தும் அவரது குடும்பத்தினரிடத்திலிருந்தும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளிலிருந்தும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஒளிப்படங்களை இலங்கை இராணுவத்தினர் கைப்பற்றியிருந்தோம்.ஒரு படத்தில் கூட மதுபானக் குவளையுடன் பிரபாகரனைக் காண முடியவில்லை. அவர் ஓர் ஒழுக்கமான தலைவராகவே இருந்தார்.

ரிஷயத் சட்டத்தை விட மேலான சட்டத்தைக் கடைப்பிடிப்பவராக இருந்தார் பிரபாகரன். ஒரு திருட்டு நடந்திருந்தால் திருடியவர், ரிஷயத் சட்டத்தில் தன் கைகளைத்தான் இழக்க நேரிடும்; ஆனால், பிரபாகரனின் சட்டத்தில் வாழ்க்கையை இழப்பார்கள்.

சைவ சமயத்தை பிரபாகரன் ஏற்றிருந்தாலும், கடவுளை அவர் நம்பவில்லை! கடவுள் சக்தி வாய்ந்த நாடுகளில் தான் இருக்கிறார் என ஒருமுறை கூறியிருந்தார். அவர் வித்தியாசமான தலைவர். பலரும் கற்க வேண்டிய பல நல்ல பண்புகள் பிரபாகரனிடம் இருந்தன என்றும் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தனது நூலில் பதிவு செய்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் தற்போது செய்திகளை வெளியிடுகின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2021இல் வெளியிடப்பெற்றது.